Tiruttani taluk and divert the surplus water into a chain of seven tanks ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டத்தின் செயற்குறிப்பு உள்ளூர் அலுவலர்களின் ஆய்வில் உள்ளது. அது இன்னும் அரசு பரிசீலனைசெய்யும் கட்டத்தை அடையவில்லை.

திரு. ஆ. பரந்தாமன் : செங்கல்பட்டு மாவட்டத்தில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றவேண்டுமானால் சென்னை மாநகராட்சி தம் ஒப்புதலைக் கொடுக்க மறுக்கிறது. இருநூறு, முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னாலேயே இருந்துவரும் ஏரிகள் இவை. சென்னை மாநகராட்சி சமீபத்தில்தான் தோன்றியது. ஆகவே நீண்ட நாட்களாக அந்தப் பகுதி மக்களுக்கு இருந்து வருகிற உரிமைகள் பாதிக்கப்படாத வண்ணம், தமிழக அரசு முயற்சி எடுத்து இவற்றுக்கு ஒப்புதலை பெற்றுத்தர முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாநகராட்சி ஆணையர் அதுபற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். அவரது பதில் வந்த பிறகு அரசாங்கம் இதுபற்றி முடிவு எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

காக்கவாக்கம் அருகில் இசா ஏரிக்குத் தடுப்புச் சுவர்

* 634 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், காக்கவாக்கம் இசா ஏரியின் எதிர் முனையில் தொளவேடு கிராமத்தைப் பாதுகாக்க அமைக்கப்படும் தடுப்புச்சுவர்த் திட்டம் (Bund) நிறைவேறுவதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைமைப் பொறியாளர் (பாசனம்) பல தொழில் நுட்பக்குறிப்புக்களை உள்ளூர் அதிகாரிகளை ஆய்வு செய்யுமாறு கேட்டுள்ளார். இவை ஆய்விலுள்ளன. இவ்வேலை தக்க அதிகாரிகளின் ஒப்புதல் கிடைத்த பின் துவங்கப்படும்.

1973 ஏப்ரல் 5]

திரு. கா. வேழவேந்தன் : ஒவ்வொரு ஆண்டு மழைகாலத்தின் போதும் இந்த இசா ஏரியின் எதிர்முனையில் உள்ள தொளவேடு கிராமம் பாதிக்கப்படுகிற காரணத்தினால் இந்த ஆண்டே இதனை எடுத்து நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது உள்ளூர் அதிகாரிகளின் பரிசிலனையில் இருக்கிறது என்று சொன்னேன். தலைமைப் பொறியாளரின் கவனத்திற்கு வந்தபிறகு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

காரணி கிராமத்தில் ஆரணி ஆற்றின் கரைகளுக்குத் தடுப்புச்சுவர்

*635 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், காரணி கிராமத்தில் ஆரணி ஆற்றின் அரிப்பைத் தடுக்க கரைத் தடுப்புச்சுவர் (Revetment) அமைப்பதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டத்திற்கு ரூ. 1,05,000-க்கு ஒரு மதிப்பீடு பொதுப்பணித்துறை அலுவலரால் தயாரிக்கப்பட்டு, செங்கற்பட்டு மாவட்ட ஆட்சியருடைய ஒப்புதலுக்கும், நிதி ஒதுக்கவும் அனுப்பப்பட்டிருக்கிறது. அவரது பதில் கிடைத்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கா. வேழவேந்தன் : என்னுடைய சொந்தக் கிராமமாகிய காரணி கிராமம் ஆரணியாற்றின் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலைப்பெற்று இந்தத் திட்டத்தை இவ்வாண்டே நிறைவேற்றித் தருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாவட்ட ஆட்சித் தலைவரின் பதில் கிடைத்தவுடன் நிறைவேற்றி வைக்கப்படும்.

வெற்றிலை சாகுபடி

*636 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தற்போது எத்தனை ஏக்கர் நிலத்தில் வெற்றிலை சாகுபடி எவ்வளவு செய்யப்படுகிறது, மாவட்டவாரியாக ?